**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

## OS. No. 197 /2024

**03.03.2026**

## P.W.2- கருத்தப்பாண்டி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

வாதி எனது மனைவி என்றால் சரிதான். ஆசைக்கனிக்கு நான் தான் வட்டிக்கு பணம் கொடுத்தேன் என்றால் எனது மனைவி கொடுத்து வாங்கினார். பிரதிவாதி ரூ.1,60,000 வட்டி கொடுத்தார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் நான் முதலாவது சாட்சி கையொப்பம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். மற்றொரு சாட்சியாக ராஜாங்கம் கையெழுத்து செய்தார். ஆசைக்கனிக்கு வட்டிக்கு கொடுத்தது போன்று பல நபர்களுக்கு வட்டிக்கு பணம் கொடுத்து வந்தேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் எனது கையெழுத்து இரண்டாவது சாட்சியாக உள்ளது என்றால் சரிதான். ஆசைக்கனியின் மாமன் மகன் தான் வட்டிக்கு பணம் வாங்கினார் என்றால் சரியல்ல. அடமான சொத்தை நான் உழவு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. அசல் தொகை ரூ.4 லட்சம் செலுத்த பிரதிவாதி தயாராக உள்ளார் என்றால் அடமான தொகை முழுவதையும், அதற்கான வட்டியும் வேண்டும்.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.03 17:56:26 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.